2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# O Level தமிழ்

## வினாத்தாள் 2

### பயிற்சி 4

பெயர் ______________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மாற்றி எழுதவும்.**

ஓநாய் ஒன்றுக்குக் காட்டில் இரை எதுவும் கிடைக்கவில்லை. அதனால், அது உணவு தேடி ஊருக்குள் நுழைந்தது. அது ஊரின் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு குடிசைப் பக்கம் வந்தது. குடிசைக்குள் மூன்று வயது சிறுவன் ஒருவன் அழுதுகொண்டு இருந்தான். பாட்டி, “அழக்கூடாது! அழுகையை நிறுத்து! இல்லாவிட்டால், உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டுவிடுவேன்!” என்று அவனிடம் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு இருந்தார்.

இதைக் கேட்ட ஓநாய் மகிழ்ந்துபோய், குடிசை ஓரமாகப் படுத்துக்கொண்டது. பாட்டி சிறுவனை எப்போது வெளியே தூக்கிப் போடுவார் என்று ஓநாய் நாவில் எச்சில் ஊறக் காத்துக்கொண்டு இருந்தது. இரவு வேளையும் வந்தது. ஓநாய் நம்பிக்கையுடன் படுத்திருந்தது.

அப்போது குடிசையின் உள்ளே இருந்த பாட்டி, “அழாதே! உன்னை ஓநாயிடம் போடமாட்டேன். அந்தக் கிழட்டு ஓநாய் வரட்டும். கம்பால் ஒரே அடி! அடித்துக் கொன்று போட்டுவிடுவோம்! கவலைப்படாதே!” என்று கூறிச் சிறுவனைத் தேற்றினார்.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

2. **பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மாற்றி எழுதவும்.**

இன்று மனிதன் பல தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றை உபயோகித்து சந்தோஷமாக வாழுகிறான். அதேசமயம் இதனால் ஏற்படும் இயற்கையின் அழிவு, காற்றில் அசுத்தம், தண்ணீரில் அசுத்தம் ஆகியவற்றை அறியாமலும் இல்லை.

தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்கள் ஆற்றில் கலந்து அதை அசுத்தப்படுகிறது. வெளிப்படுத்தப்படும் எரிவாயு காற்றை அசுத்தப்படுத்துகிறது. இதனால் கரியமில வாயு அதிகரிக்கிறது. வாகனங்கள் நஞ்சுக்காற்றை வெளிப்படுத்துகின்றன. சுற்றாடல் அசுத்தம் அடைகிறது, இதனால் மக்களுக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன. மரங்கள் அழிக்கப்படுவதால் மழை பெய்வது குறைவடைகிறது. நிலத்திற்கு அடியில் இருக்கும் நீர் நிலையின் மட்டமும் குறைந்து வருகிறது. விவசாயமும் பாதிக்கப்படுகிறது. தண்ணீர்ப் பாவனைக் கட்டுப்பாடு கொண்டுவரப்படுகிறது. இவை எல்லாம் மனிதனால் ஆக்கப்பட்டவை. இனிமேற் காலத்தில் இதை மக்கள் கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

கடல் நீரைச் சுத்தப்படுத்தி நன்நீர் ஆக்கும் திட்டங்கள் உருவாகி வருகின்றன. கழிவுப்பொருட்களை மறுபாவனைப் பொருட்களாக்கும் திட்டங்கள் ஆக்கப்படுகின்றன. எமது வீட்டுப் பாவனைக் கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி அவை சேகரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இங்கிலாந்து போன்ற நாடுகளில் வீட்டுப் பாவனைக்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்_ வளர் தமிழ் 4

கழிவுப் பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு வைக்கப்பட வேண்டும் என ஊக்கப்படுத்தப் படுகின்றனர். இது சுற்றாடல் அசுத்தப்படுவதைத் தடுத்துக்கொள்ள உதவும். கழிவுப் பத்திரிக்கைகளை மறுபயன்பாட்டிற்குப் பாவிப்பதால் மரங்களை அழிக்கும் தொகை குறையும்.

எமது சூழல் உடல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. சூழலைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

3. **தமிழில் மாற்றி எழுதவும்.**

Mankind, which controlled its hunger by hunting animals, began to witness different changes in its lifestyle as it started to live by cultivating the river valley. An important one among them is engaging in new activities to pass the time when cultivation is not done.

After controlling his hunger, he created the culture to pass the remaining time. As it is, culture is the first hobby. In the course of time they made changes in pursuit of leisure activities.

In the period prior to the introduction of the computer, reading storybooks, collecting different coins and stamps, home gardening, embroidery work, listening to the radio and dealing with pen pals were the types of leisurely activities engaged in. The computer and technological revolution has brought about many changes in the activities designed to aid relaxation.

Changes in lifestyle mean there is greater variety in leisure activities according to age and economic status. Centres have been constructed and maintained with facilities and organized activities to engage in.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

Currently children or their elders engage in either the computer related activities including mobile smartphones.

Some, but not all leisure activities are beneficial. However, modernisation occurs in all aspects of the leisure industry and this is important to ensure that the activities do provide pleasure, mental stimulation as well as rest and relaxation.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4